# ஜீவ ஒளி

"என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்."
(யோவான் 8:12)

2017 ~ ஜூலை ~ ஆகஸ்ட ~ செப்டெம்பர் வெளியீடு

ஒருவன் என்னிலும்
நான் அவனிலும் நிலைத்திருந்தால்,
அவன் மிகுந்த கனிகளைக்கொடுப்பான்.
யோவான் 15:5

# ஜீவ ஒளி

தேவனுடைய வார்த்தைகள் அடங்கிய, ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியை பெற்றுக்கொடுக்கக்கூடிய **ஜீவ ஒளி** சஞ்சிகையை வெளியிடுவதில் நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இச்சஞ்சிகையின் மூலம் அநேக விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சி அடைவதும் இயேசு கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளாதவர்கள் அவரை இரட்சகராக ஏற்றுக்கொள்வதுமே எங்களுடைய ஜெபமாயுள்ளது.

கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனம் வெளியிடும் இவ்விலவச சஞ்சிகையை தொடர்ந்து நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பினால் கடைசி பக்கத்தில் உள்ள கூப்பனை பூர்த்தி செய்து கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**ஜீவ ஒளி**
**கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனம்**
**07, விவேகானந்த வீதி, கொழும்பு 06.**
**தொ. பே.: 011 2 581901**
www.christianfellowshipcentre.com

# தேவனுடைய ஆவியினாலே...

***"மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்."***
***(ரோமர் 8:14)***

உங்களுடைய மகன் கைக்குழந்தையாக இருக்கும் பொழுதே, அவனைப் பார்த்து உங்களுடைய ஆஸ்தி பாஸ்திக்கெல்லாம் அவனே வாரிசாகவும் அதிகாரியாகவும் இருக்கப்போவதாக நீங்கள் அவனிடம் சொன்னால், அக்குழந்தைக்கு ஏதாவது புரியுமா? நீங்கள் பேசுவது ஒன்றுமே அவனுக்கு புரியாதல்லவா? அக்குழந்தை ஒரு சில அற்பமான காரியங்களைத்தான் அப்பருவத்தில் அனுபவிக்க முடியும். அவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளப்போகிறான் என்பது அவனது புத்திக்கு எட்டாத காரியமாகும். ஒரு பைசாவின் மதிப்பும் உபயோகமும் கூட தெரியாத ஒருவன் பெரிய ஆஸ்தியின் மதிப்பையும் உபயோகத்தையும் எப்படி அறிவான்? ஆனால் அவன் பெரியவனாக வளரும் பொழுது எல்லாவற்றையும் அதிகமதிகமாக புரிந்து கொள்வான். இதைப் போல ஆவிக்குரிய வளர்ச்சியும் முதிர்ச்சியும் அடையும் போது நீயும் ஆவிக்குரிய இந்த மேலான சத்தியங்களையும் தேவனுடைய நித்தியமான பரலோக திட்டங்களில் அவருடைய உடன்-ஊழியனாக நீ பெற்றுக்கொள்ளப்போகும் பொறுப்புக்களையும், ஆற்றும் பணிகளையும் பற்றி அறிந்து கொள்வாய்.

முன்னொரு காலத்தில் ஒரு சில இளைஞர்களைத் தெரிந்தெடுத்து, அவர்களைக்கொண்டு இராஜ்ஜியத்தின் உயர்ந்த பதவியிலிருக்கிற அதிகாரிகளை வெட்கப்படுத்தி, அதே வேளையில் தாம் ஏற்படுத்தின நீதி, நியாயம், சட்டம், ஒழுங்கு யாவையும் தேவன் எவ்வாறு நிலை நாட்டினார் என்று தானியேலின் புத்தகத்தின் வாயிலாக அறிகிறோம். இஸ்ரவேல் மக்கள் இடைவிடாமல் தேவனுடைய வசனத்திற்கு விரோதமாக கலகம் செய்து கொண்டேயிருந்தார்கள். கடைசியாக அவர்களைத் தண்டிப்பதற்காகவே பாபிலோனுக்கு அவர்கள் அடிமைகளாகக் கொண்டு போகப்பட தேவன் இடங்கொடுத்தார். அப்படியிருந்தும், தமது ஜனத்தைக் குறித்து தேவன் கொண்டிருந்த மேலான நோக்கம் அந்த நேரத்திலும் மாறிவிடவில்லை.

அவர்கள் அந்நிய நாட்டில் சிறைப்பட்டிருந்த போதிலும் அவர்கள் இன்னமும் தேவனுடைய ஜனங்களே. தேவன் அவர்களிடம் இன்னமும் அன்புள்ளவராகவே இருந்தார். ஆனால் தமது அன்பை ஏற்றுக்கொண்டு அதற்குச் சரியான பிரதியுத்தரம் அளித்தவர்களையே தேவன் பயன் படுத்த முடியும். வெகு சிலரே தேவனுடைய வார்த்தையின்படி நடப்பதற்கும் அவரது கட்டளைக்கு கீழ்ப்படிவதற்கும் ஆவலுள்ளவர்களாயும் இருந்தனர். இவர்களே தேவனுக்குப் பிரியமான மீதமானவர்கள்.

-சகோ. பக்த் சிங்-

# கிறிஸ்தவ(ன்)(ள்)ம் எங்கே?



கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! இந்த நவநாகரீக உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் கிறிஸ்தவ மக்கள் என்று கூறிக்கொள்பவர்களிடையே கிறிஸ்தவத்தை தேட வேண்டியதாய் இருக்கிறது. ஏன் இப்படி என்று நினைக்கிறீர்களா? கிறிஸ்தவம் அது ஒரு தனித்துவம். அது ஒரு மகத்துவம். அது மாறாத சரித்திரம். ஆனால் இன்று மற்ற மதங்களைப் போலவே இதுவும் எண்ணப்படுகிறது. சில வேளைகளில் அதை விட குறைவாகவும் கருதப்படுவதுண்டு. இதற்கு யார் காரணம்? ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்தவளும் தான்.

சபை வாழ்வைப் பார்ப்போமானால் சபை கூடுதலின் நாட்களில், சரியான நேரத்திற்கு வராதபடி, இஷ்டம் போல வருவதும், மனம் போல வெளியே போவதும் காணப்படுகிறது. ஆனால் பெலனற்றதும் வெறுமையானதுமான வழிபாடுகளைச் செய்கிறவர்களுடைய ஒழுங்கை சற்று சிந்தித்துப்பாருங்கள். நாம் எங்கே நிற்கிறோம்?

அடுத்து ஜெப வாழ்வைப்பார்த்தால் வாழ்க்கைக்கும் ஜெபத்திற்கும் சம்மந்தமே இல்லை. நினைவு வந்தால் ஜெபம். இல்லாவிட்டால் தம் கடமைகள். இன்னும் சில பெற்றோர் மாத்திரம் ஜெபிக்கிறார்கள். ஆனால் பிள்ளைகளின் ஜெப வாழ்வைப்பற்றி அக்கறையற்ற நிலை. இதுவா கிறிஸ்தவம்?

இயேசு தம் வாழ்வில் ஜெபத்திற்கு எவ்வளவு முக்கியத்துவமளித்தார்! கிறிஸ்தவனே(ளே), நீ எப்படி?

ஆடை அணிவதைப் பார்ப்போமானால், ஆஹா! எவ்வளவு அழகான ஆடை என்று நீ வாங்கி அணிவது அவலட்சணமாக இருக்கிறதென்று நீ அறியவில்லையா? உன் சரீரம் தேவனுடைய ஆலயம் என்றும் நீ வேதத்தில் வாசிக்கவில்லையா? (1 கொரி 3:16). ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக்கெடுத்தால் தேவன் அவனைக்கெடுப்பார். ஆகவே, மகத்தான கிறிஸ்தவ லட்சணத்தை அவலட்சணமாக்க முற்படாதே.

உறவு என்று சிலவற்றைப்பார்ப்பேமானால், இரட்சிக்கப்படாத மாமி, மருமகள் உறவு மிகவும் அருமையாக இருக்கிறது. ஆனால் திருச்சபைக்குச் சென்று தேவனை ஆராதித்து வேத வார்த்தைக்கு நான் கீழ்படிந்து அதில் கட்டுப்படுகிறேன் என்று சொல்லுகிற மாமி தன் மருமகளைப் பற்றி அவதூறாகவும் மருமகள் தன் மாமி பற்றி தூஷிக்கிறவளாகவும் காணப்படுகிறார்கள்.


இதுவா கிறிஸ்தவ வெளிப்பாடு? வேத வார்த்தையில் வளர்ந்த நிலை இதுதானா? கர்த்தரை ருசி பார்த்த அளவு இவ்வளவு தானா? 1 பேதுரு 2:2ல், “சகல துர்க்குணத்தையும் புறங்கூறுதலையும் ஒழித்துவிடுங்கள்” என்று வேதம் கூறுகிறது. மத்தேயு 12:36ல், “மனுஷர் பேசும் வீணான வார்த்தைகளைக்குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும்” என எழுதப்பட்டிருப்பதை மறந்து விட வேண்டாம்.

நண்பர்கள் எனும் விடயத்தை நோக்கினால், எங்கள் நட்பு யாருடன் அதிகமாக இருக்கிறது? சபை

மக்களோடு ஓடும் புளியம்பழமும் போல ஒட்டியும் ஒட்டாத உறவு, உலகத்தாரோடு நகமும் சதையும் போன்ற உறவு. உலக சிநேகம் (நட்பு) தேவனுக்கு விரோதமான பகை என்று வேதம் நம்மை யாக்கோபு 4:4ல் எச்சரிக்கிறது. அவர்களை ஆதாயப்படுத்தலாம் என்று எண்ணி அவர்களால் நீ ஆதாயப்பட்டு விடாதே, எச்சரிக்கையாக இரு. உன் நடை, உடை, பேச்சு இவைகளை காத்து நட. உலகம் போகும் போக்கில் நீ போகலாமா? நீ தேவ சந்ததி அல்லவா? நீ தேவ சாயலை அல்லவா வெளிப்படுத்த வேண்டும்!

சிந்தியுங்கள். உண்மையாக மனந்திரும்பி வாழுங்கள். கிறிஸ்தவத்தை உலகத்தில் தேடித்திரிய வைக்காதீர்கள். சபையிலும், சமூகத்திலும் கிறிஸ்தவம் வாழ வழி விடுங்கள். கர்த்தர் உங்களை நடத்துவாராக.

சகோதரி. பெனவெந்தூர் இசபெலா விஜி தோணிக்கல்



**நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?**
**1 கொரிந்தியர் 3:16**

## எங்கள் ஐக்கியத்தில் இடம்பெறும் கூட்டங்கள்

**ஞாயிற்றுக்கிழமை**

மு.ப. 8.15 - ஞாயிறு பாடசாலை
மு.ப. 9.30 - ஆராதனை வேளை
பி.ப 1.30 - வாலிபர் கூட்டம்
பி.ப. 4.00 - சுவிசேஷக்கூட்டம் (சிங்கள மொழி)
பி.ப. 6.00 - சுவிசேஷக்கூட்டம் (ஆங்கில மொழி)

**செவ்வாய்க்கிழமை**

பி.ப 6.30 - சுவிசேஷக்கூட்டம் (தமிழ் மொழி)

**புதன் கிழமை**

பி.ப 6.00 - ஜெபக்கூட்டம்

**வெள்ளிக்கிழமை**

பி.ப 6.00 - வேத ஆராய்ச்சி

இக்கூட்டங்களில் பங்குபெற உங்கள் அனைவரையும் அழைக்கிறோம்!



# அவர் இங்கே இல்லை

- Bro. Timothy De Alwis -

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரில் இருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாய் இருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார் (ரோமர் 8:11) .

எமது அன்றாடக பிரச்சினைக்கு முகங்கொடுக்க அவருடைய உயிர்த்தெழுந்த வல்லமை எமக்கு பெலனை அருள்கிறது.

**"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலிப்பியர் 4:13)**

நாம் ஒரு உண்மை சம்பவத்தைப் பார்ப்போம்.

அநேக வருடங்களுக்கு முன்பு ஒரு அருட்பணியாளர் துருக்கி நாட்டிற்கு தேவபணிக்காக சென்றார் அந்நாட்டு மக்களுக்கு ஆண்டவரை அறிவிப்பதின் அவசியம் எவ்வளவென்பதையும் அதிக சிரமம் எடுக்க வேண்டுமென்பதையும் அறிந்திருந்தார். அதிக கடினமான சூழ்நிலைகளுக்கு அவர் முகங்கொடுக்க வேண்டியதாகவிருந்தது.

அவர் ஒரு நாள் ஒரு முஸ்லிம் நண்பரோடு பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது, செல்ல வேண்டிய இடத்திற்கான வரைபடமோ அல்லது அடையாளமோ இல்லாதபட்சத்திலும் ஒரு சந்தி வரை வந்து யோசித்துக்கொண்டிருந்தார்கள். அங்கு ஆட்களின் நடமாட்டமும் பெரிதாய் இருக்கவில்லை. அவ்வேளையில் அம்மிஷனரி அந்த முஸ்லிம் நண்பரைப்பார்த்து தொலைவில் தென்பட்ட ஒரு முஸ்லிம் பரிசுத்தவானின் கல்லறையைக் கண்டு "வாருங்கள் அந்த கல்லறையிடம் சென்று வழியை விசாரிப்போம்" என்றார். அதைக்கேட்டு அந்நண்பர் சிரித்துக்கொண்டே "இறந்த ஒருவரிடம் எப்படி வழி கேட்பாய்? அதோ அங்கு வீடுகளும் தெரிகின்றதே. அங்கு சென்று உயிருள்ள மனிதர்களிடமே வழி கேட்போம்" என்றார். அதற்கு மிஷனரி "நீங்கள் மிகவும் சரியாய் பதில் சொன்னீர்கள். நீங்கள் மறந்துவிடாதீர்கள் இறந்துபோன உங்கள் தூயர் முகமது அவர்களால் நீங்கள் கடவுளிடம் செல்லும் மார்க்கத்தை (வழியை) காட்ட முடியாது? அவர் இறந்துவிட்டார். அவருக்குள் ஜீவன் இல்லை. ஆனாலும், உயிரோடு எழுந்தவர் ஒருவர் இருக்கிறார். அவர்தான் இயேசு கிறிஸ்து" என்றார்.

*அதற்கு இயேசு:*
**நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். யோவான் 14:6**

வேறு மதக்கொள்கையினரும் இதோ! இங்குதான் எங்கள் ஆன்மீகத் தலைவர்களை அடக்கம்பண்ணினோம். இதோ! தலைமுடி, இதோ! பல் என்று காட்டுவார்கள்.

ஆதலால், நாம் தலை நிமிர்ந்து இவ்வுலகுக்கு சொல்ல வேண்டிய செய்தி என்ன? நாம் பெருமிதமாக சொல்ல வேண்டும். இதோ! பாருங்கள்! எங்கள்

ஆண்டவரின் கல்லறை வெறுமையாயிக்கிறது. எங்கள் ஆண்டவர் உயிரோடு எழுந்தார்! அல்லேலூயா!

**"மரித்தேன், ஆனாலும், இதோ,<br>சதாகாலங்களிலும்<br>உயிரோடிருக்கிறேன், ஆமென்."<br>வெளி 1:18**

எமக்கு எதிர்பார்ப்பும்,<br>எதிர்கால நம்பிக்கையும் இருக்கிறது.

**"கலிலேயராகிய மனுஷரே,<br>நீங்கள் ஏன் வானத்தை<br>அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்?<br>உங்களிடத்தினின்று வானத்துக்கு<br>எடுத்துக் கொள்ளப்பட்ட<br>இந்த இயேசுவானவர் எப்படி<br>உங்கள் கண்களுக்கு முன்பாக<br>வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ,<br>அப்படியே<br>மறுபடியும் வருவார் என்றார்கள்."<br>அப்போஸ்தலர் 1:8**

**"வானங்களின் வழியாய்ப்<br>பரலோகத்திற்குப்போன<br>தேவகுமாரனாகிய இயேசு என்னும்<br>மகா பிரதான ஆசாரியர் நமக்கு<br>இருக்கிறபடியினால், நாம் பண்ணின<br>அறிக்கையை உறுதியாய்ப்<br>பற்றிக்கொண்டிருக்கக்கடவோம்."<br>எபிரெயர் 4:14**

**"பின்பு உயிரோடிருக்கும் நாமும்<br>கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக,<br>மேகங்கள்மேல் அவர்களோடேகூட<br>ஆகாயத்தில்<br>எடுத்துக்கொள்ளப்பட்டு,<br>இவ்விதமாய் எப்பொழுதும்<br>கர்த்தருடனேகூட இருப்போம்."<br>1 தெசலோ 4:17**

## வேதாகம புத்தகங்கள் பற்றிய புதுமையான புள்ளிவிபரங்கள்

### யோசுவா

| | | |
|---|---|---|
| எழுதியவர் | : | யோசுவா |
| அதிகாரங்கள் | : | 24 |
| வசனங்கள் | : | 658 |
| கேள்விகள் | : | 21 |
| கட்டளைகள் | : | 98 |
| எச்சரிக்கைகள் | : | 44 |

பகுப்பு

- வாக்குத்தத்த நாட்டை வெற்றி கொள்ளுதல்
  (1:1 முதல் 13:7)
- வாக்குத்தத்த நாட்டைப் பங்கிட்டு கோத்திரங்களை குடியேற்றுதல்
  (13:8 முதல் 24:33)

மோசேயின் ஐந்தாகமங்களுக்கு பின்பு யோசுவா முதல் எஸ்தர் வரை உள்ள 12 வரலாற்று நூல்களை வேதாகமத்தின் இரண்டாம் பகுதி எனலாம். அவற்றில் முதலாம் நூலாகிய யோசுவா ஐந்தாகம நூல்களையும் இஸ்ரவேலரின் தொடர்ந்த வரலாற்றையும் இணைக்கிறது

# இயேசு கிறிஸ்துவைக்குறித்த சாட்சிகள்

யோவான் எழுதிய சுவிசேஷ புத்தகத்தில் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் தேவத்துவத்தைக் குறித்தான நேரடியான சாட்சிகள்

**1. யோவான்ஸ்நானகனின் சாட்சி**

இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி. இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்துவருகிறேன் என்றான். (யோவான் 1:29,34)

**2. நாத்தான்வேலின் சாட்சி**

ரபீ, நீர் தேவனுடைய குமாரன், நீர் இஸ்ரவேலின் ராஜா என்றான். (யோவான் 1:49)

**3. பேதுவின் சாட்சி**

நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம் என்றான். (யோவான் 6: 68,69)

**4. மார்த்தாளின் சாட்சி**

ஆம், ஆண்டவரே, நீர் உலகத்தில் வருகிறவரான தேவகுமாரனாகிய கிறிஸ்து என்று நான் விசுவாசிக்கிறேன் என்றாள். (யோவான் 11:27)

**5. தோமாவின் சாட்சி**

என் ஆண்டவரே! என் தேவனே! (யோவான் 20:28)

**6. யோவானின் சாட்சி**

இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது. (யோவான் 20:31)

**7. இயேசு கிறிஸ்து தன்னைக் குறித்து தானே கொடுத்த தெளிவான சாட்சி**

நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம். தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார். (யோவான் 1:18 /10:30)

- Sis. Tilaka -
வேதபடிப்பொன்றின் தொகுப்பு

# எனது அடையாளம்

- Bro: Benjamin Devadason -

## சென்ற இதழின் தொடர்ச்சி...

1 பேதுரு 1:1-9

### ஜீவனுள்ள நம்பிக்கையுடைய ஜனங்கள். 1 பேதுரு 1:4

நமது ஆண்டவர் உயிருள்ளவர். நமது தேவன் உயிருள்ளவர். தேவ வார்த்தை உயிருள்ளது. எமது நிலைப்பாட்டை சிலருடைய வார்த்தைகள் சிதைவு படுத்தினாலும், எமக்கு என்னென்ன நடந்தாலும், எமது நம்பிக்கையின் உறுதிகள் சோதிக்கப்பட்டாலும், பாடுகளை அனுபவித்த ஆண்டவர் எமக்கிருக்கிறார். அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடு பட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார். எபிரெயர் 2:18

அண்மையில் என்னை அதிர்ச்சிக்கு உள்ளாக்கிய மூன்று திடீர் மரணங்களை பற்றி சொல்லியாக வேண்டும். 25 வயதுடைய யுவதி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். இரண்டாவதாக 25 வயது இளைஞனொருவன் கார் விபத்தில் மரணமடைந்தான். அடுத்தது ஒரு மாணவத்தலைவன் தடுமாறி மலையில் இருந்து விழுந்து மரித்தான். இம்மூன்று பேரில் இருவர் ஆண்டவருடைய பிள்ளைகள். அவர்களைக் குறித்த எமது ஜீவனுள்ள நம்பிக்கை என்ன? நிச்சயமாய் இவ்விருவரை நாம் சந்திப்போம். ஆனால், அந்த யுவதியின் தாயாரோ ஐயோ! என்னுடைய மகள் கர்த்தரை அறியாமல் போய்விட்டாளே! என்று ஓயாமற் சொல்லி அழுதாள்.

### நாம் சந்தோஷமாயிருக்க வேண்டிய ஜனங்கள். 1 பேதுரு 1:6,8

நாம் பெற்றுள்ள சந்தோஷத்தை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. நாம் மற்றவர்களுக்கு நற்செய்தியை சொல்லும் போதும், எம்மால் மற்றவர்கள் ஆண்டவரை ஏற்றுக்கொள்ளும் போதும், விசேஷமாய் எமது ஊழியங்களிலே சந்தோஷமாய் காண்போம்.

இதோ! தாவீதைப் பாருங்கள். சங்கீதம் 30:11: என் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாறப்பண்ணினீர். என் மகிமை அமர்ந்திராமல் உம்மைக் கீர்த்தனம் பண்ணும்படியாக நீர் என் இரட்டைக் களைந்துபோட்டு, மகிழ்ச்சியென்னும் கட்டினால் என்னை இடை கட்டினீர்.

### நாம் சோதிக்கப்பட்டு, பரிசீலித்து பார்க்கப்பட்ட ஜனங்கள் 1 பேதுரு 1:7

எமது வாழ்வில் நாம் சந்திக்கும் துக்க, துயரங்களை தவிர்க்க முடியாது. கர்த்தருக்காக நாம் வாழும்போது, துக்கம், நிந்தைகள், தேவ ஊழியங்களிலே துன்பப்படுவது மிக மிக அவசியமாய் இருக்கிறது. அவைகளை நாம் துரதிஷ்டம் என்று சொல்லல் ஆகாது. நாம் பாடுபடவே வேண்டும் என பேதுரு வலியுறுத்தி கூறுகிறார். நித்திய காலத்தோடு அவைகளை ஒப்பிடும்போது கொஞ்சமே, சொற்பமே என கருத்திற் கொள்ளவேண்டும்.

ஒரு விசுவாச பெண்ணொருவருக்கு கடும் நோயுற்ற ஒரு மகள் இருந்தாள். அம்மகள் சுமார் ஐந்து வருடங்களாக நோய் படுக்கையிலேயே இருந்தாள். அந்த தாயானவள் ஒவ்வொரு நாளும் தன் மகளருகில் அமர்ந்து தேவ வசனத்தை வாசித்து, பாடல்களைப்பாடி, ஜெபித்து வந்தாள். அந்தப்பிள்ளையின் மரணம் வரை அப்படியே செய்தாள். நான் என்றால் சொல்கிறேன், அது ஒரு நீண்ட கால பரீட்சை என்றே. ஆதலால், எமது விசுவாசத்தைப் பொறுத்தமட்டில் விசுவாசமானது நெருப்பினூடாக கடந்து செல்லும் அக்கினி பரீட்சையாக இருக்கின்றது

தொடரும்......

# பேதுருவின் வீழ்ச்சிக்கான 7 தவறுகள்

- Sis. Anne Jayasundara -

பேதுருவின் நம்பிக்கைகள் சிதைதலின் விளைவில் அவனின் வீழ்ச்சிகளோடு எமது ஆவிக்குரிய வாழ்வின் வீழ்ச்சிகளை ஒப்பிட்டுப் பார்ப்போம்.

**1. மத்தேயு 26:33**

மற்றவர்களை குறைத்து மதிப்பிடுவது அல்லது அற்பமாய் கருதுதல் - "உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் ஒருக்காலும் இடறலடையேன்" என்றான். "மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்" (பிலிப்பியர் 2:3). இதுவே கிறிஸ்தவர்களுக்குரிய நியதி.

**2. மத்தேயு 26:33**

யார் இடறல்கள் அடைந்தாலும்.... தன்னைக் குறித்ததான அதீத தன்னம்பிக்கை. யோவான் 13:37 - ஆண்டவரே, நான் இப்பொழுது உமக்குப் பின்னே ஏன் வரக்கூடாது? உமக்காக என் ஜீவனையும் கொடுப்பேன் என்றான்.

**3. மத்தேயு 26:31**

தேவ வார்த்தையால் அவன் எச்சரிக்கப்பட்டிருந்தும், அதையும் மீறி கவலையீனமாய் இருத்தல். திருவசனத்தை அவமதிக்கிறவன் நாசமடைவான். கற்பனைக்குப் பயப்படுகிறவனோ பலனடைவான்( நீதிமொழிகள் 13:13) ஆண்டவரால் அவனுக்கு கிடைக்கப்பெற்ற எச்சரிக்கைகள், அறிவுறுத்தல்களை ஏற்றுக்கொண்டு விசுவாசத்தில் பெலப்படுவதற்கு அவனுக்கு வேண்டுதல் செய்யவேண்டியதாய் இருந்தது.

**4. மத்தேயு 26:58**

இயேசுகிறிஸ்துவிடமிருந்து தூர பயணித்தல் ஐயப்பாட்டினாலோ, யாதொரு காரணமாக ஆண்டவரிடமிருந்து விலகி தூர நடக்க ஆரம்பித்து கடைசியாக ஆண்டவரை மறுதலிக்குமளவுக்கு எம்மை கொண்டு செல்லும்.

**5. மத்தேயு 26:51**

தமது சரீர பெலத்தையும், தனது சுய பெலத்தையும் நம்பிச் சார்வது. அப்பொழுது சீமோன் பேதுரு, தன்னிடத்திலிருந்த பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலதுகாதற வெட்டினான். யோவான் 18:10

**6. மத்தேயு 26:69**

பிழையான உறவுகள், தொடர்புகள் ஆவியை பெலவீனப்படுத்தும். "பேதுரு வெளியே வந்து அரமனை முற்றத்தில் உட்கார்ந்திருந்தான்". சங்கீதம் 1:1-3

**7. மத்தேயு 16:22,23**

தெய்வீக திட்டங்களை மனித ஞானத்தால் புரிந்து கொள்ள முயற்சித்தல். ஆண்டவராகிய இயேசு சிலுவைக்கு செல்வது குறித்து பேதுரு கொண்டிருந்தது தவறான புரிதலாகும். அவன் அவருக்கு இடையூரானான்



# சித்தமுண்டு சுத்தமாகு!

வாசிக்க வேண்டிய வேதப் பகுதி:
மத்தேயு 8:1-3, மாற்கு 1:40-44

மேற்குறிப்பிடப்பட்டுள்ள வேதாகமப்பகுதிகளிலே குஷ்டரோகி ஒருவன் இயேசு கிறிஸ்துவினிடத்தில் வந்து சுகத்தைப் பெற்றுக்கொண்ட சம்பவத்தை வாசிக்க முடிகிறது. அம்மனிதனின் மிகச் சுருக்கமான மன்றாட்டிற்கு ஆண்டவர் மன உருக்கமாய் இரங்கி விடுதலை கொடுத்ததைக்காண்கிறோம்.

“குஷ்டரோகி ஒருவன் வந்து
அவரைப் பணிந்து: ஆண்டவரே!
உமக்குச் சித்தமானால்,
என்னைச் சுத்தமாக்க உம்மால்
ஆகும் என்றான். இயேசு தமது
கையை நீட்டி அவனைத் தொட்டு:
எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு
என்றார். உடனே குஷ்டரோகம் நீங்கி
அவன் சுத்தமானான்.”
(மத்தேயு 8:2,3)

இந்த மனிதனுடைய மன்றாட்டின் பின்புலத்திலே காணப்படுகின்ற மூன்று முக்கியமான குணாதிசயங்களை நாம் தியானிக்க வேண்டும். அதாவது, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினிடத்திலே விடுதலைக்காக வரும் ஒருவனிடத்திலே இருக்க வேண்டிய **பணிவு, துணிவு, கனிவு** எனும் மூன்று நல்ல குணாதிசயங்களை இந்தக் குஷ்டரோகமுள்ள மனிதனின் செயற்பாட்டிலே இருந்தமையை இப்பொழுது நாம் சிந்திப்போம்.

### 1. பணிவு

அவன் ஆண்டவரிடம் வந்ததும் அவரைப்பணிந்து கொண்டதை நாம் காண்கிறோம். அது மாயமான தாழ்மை அல்லாமல் மனப்பூர்வமாகவே, முழு மனதுடனும் முழு சிந்தையுடனும் ஆண்டவரிடத்தில் ஏறெடுக்கப்பட்ட மன்றாட்டாக இருக்கிறது. இன்று பெரும்பாலும் அநேகமானவர்கள் இயேசு கிறிஸ்துவிடத்தில் வந்தும் விடுதலை பெறாமல் வந்த வண்ணமே திரும்பிச்செல்வதற்கு காரணம் அவர்களது பெருமை அல்லது மாய்மாலம். சிலர் தங்களுக்குள்ளிருக்கும் வீண் பெருமையினால் தேவ சமுகத்தில் தம்மை தாழ்த்த மனமற்றவர்களாய் கடந்து சென்று விடுகின்றனர். தங்களது மதத்தைக் குறித்தும், இனத்தைக்குறித்தும், அந்தஸ்தைக்குறித்தும் அவர்களுக்குள் இருக்கும் பெருமையான எண்ணங்கள் அவர்களது விடுதலைக்குத் தடையாக அமைந்து விடுகின்றன. ஆம், தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். தாழ்மை உள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார். (யாக்கோபு 4:6)

இன்னும் சிலர், தங்களைத் தாழ்த்துவது போலக் காண்பிப்பார்கள். ஆனால், அதிலே உண்மை இருக்காது. ஆவுர்கள் மன்டியிட்டு, கரங்களை விரித்து, அலங்கார வார்த்தைகளால் மன்றாடுவார்கள். அவர்கள் உள்ளமோ வேறே சிந்தையாயிருக்கும். அதனால் தான் நீங்கள் தகாத விதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியினால் பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள். இருமனம் உள்ளவர்களே உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள்

என்று யாக்கோபு தன் நிருபத்தில் கடிந்து கொள்கிறார். (யாக்கோபு 4:3,8)

## 2. துணிவு

அடுத்தபடியாக அந்தக்குஷ்ட-ரோகியானவன் தனக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த தடையைப் பொருட்-படுத்தாமல் அவற்றைத் தாண்டி ஆண்டவரிடம் போனால் மட்டுமே எனக்கு விடுதலை கிடைக்கும் என்று துணிந்து கர்த்தரிடம் வந்தான். ஏனென்றால், குஷ்டரோகமுள்ள ஒருவன் வேறு எவரையும் தன்னைத் தொடவோ, கிட்டிச்சேரவோ அனுமதிக்கக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருந்தது.

“அந்த வியாதி உண்டாயிருக்கிற
குஷ்டரோகி வஸ்திரம்
கிழிந்தவனாயும், தன் தலையை
மூடாதவனாயும் இருந்து, அவன்
தன் தாடியை மூடிக்கொண்டு, “தீட்டு,
தீட்டு” என்று சத்தமிடவேண்டும்....
ஆகையால், அவன் தனியே
குடியிருக்கவேண்டும்.
அவன் குடியிருப்பு பாளையத்துக்குப்
புறம்பே இருக்கக்கடவது.”
(லேவியராகமம் 13:45-46)

ஆனாலும், அந்த மனிதன் இயேசு கிறிஸ்துவைப்பற்றி அறிந்து கொண்ட போது அவரால் மட்டுமே இந்த வியாதி-யிலிருந்து விடுதலை கிடைக்கும் என உணர்ந்து தடைகளையும் மீறி துணிவுடன் இயேசுவிடம் வந்தான்.

வேதத்தில் குஷ்டரோகம் என்பது பாவத்திற்கு உவமானமாகவே அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. ஏனெனில், இரண்டுமே ஒரே தன்மை-யுடையனவாக இருக்கின்றன. அவை அருவருக்கத்தக்கதும், தொற்றக்-கூடியதும், அழிவை உண்டாக்குவதும் மற்றும் மனிதர்களின் முயற்சியால் விடுவிக்கப்படக் கூடாதவையாகவும் இருக்கின்றன.

இன்று மனிதர்கள் பெரும்பாலும் தங்களது மதம் பாரம்பரியம் சட்ட-திட்டங்கள், கட்டுப்பாடுளைத் தாண்டி கர்த்தரிடம் திரும்புவதற்குத் துணிவு அற்றவர்களாய்க் காணப்படுகின்றனர். பாவம் செய்வதற்குத் துணிவு கொள்ளுகிறவர்கள் அதை அறிக்கை செய்வதற்கும் ஒத்துக்கொள்ளுவதற்கும் துணிவற்றவர்களாயிருக்கின்றனர். இதனாலேயே அநேகர் தேவன் அருளும் இலவச ஈவாகிய இரட்சிப்புக்-குத் தூரமாகிப் போய்விடுகின்றனர். ஆனால், எவனொருவன் தன்னுடைய மதம் சார்ந்த கட்டுப்பாடுகள் மனிதர்களின் தடைச்சட்டங்கள் போன்ற தேவனுக்கு எதிரான தடைகளை மீறி துணிந்து ஆண்டவர் இயேசுவிடம் வருகின்றானோ அவனுக்கு அவர் இலவசமாகவே பாவ மன்னிப்பையும், மீட்பையும் அருள அவர் வல்லமை உடையவராக இருக்கின்றார்.

## 3. கனிவு

மூன்றாவதாக, அந்த மனிதனுடைய நடத்தையிலே கனிவு காணப்படுவதைப்-பார்க்கிறோம். அதாவது, அவன் விசுவாசத்தின் முழு நிச்சயத்துடன் இயேசுவிடம் வந்தான். அவன் ஆண்டவர் முன் பணிந்து மன்றாடிய விதம் அதை எமக்குப் புலப்படுத்துகிறது. அவன் மனப்பூர்வமாகவும், பயபக்தியுடனும், தாழ்மையுடனும் கூடிய விசுவாசத்துடன் தன்னுடைய தேவையைக்கருத்துடனும் சுருக்கமாகவும் ஆண்டவர் முன் சமர்ப்பித்தான். ஆண்டவரும் அவனது வேண்டுதலுக்கு உடனடியாகவே பதிலுரைத்து விடுதலையும் கொடுத்தார்.

அவர் மனதுருகினார். தனது கையை நீட்டினார். அவனைத்தொட்டார். எனக்கு சித்தமுண்டு என்று சொல்லி அவனை சுத்தமாக்கி அனுப்பினார்.

ஆம், என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை என்று சொன்ன ஆண்டவர், மனிதர்களுள் எப்படிப்பட்ட பாவியானாலும் அவர் மேல் விசுவாசம் வைத்து அவரைத்தேடி வருபவர்களுக்கு, பாவமன்னிப்பையும் நிலைபேறான வாழ்வின் நிச்சயத்தையும் அருளி புதுச்சிருஷ்டியாக வாழவும் ஜாதி, இன, மத, மொழி வேறுபாடு இன்றி அனைவரையும் தேவனோடு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவர் அதிகாரம் உடையவராய் இருக்கின்றார்.

“தேவன் ஒருவரே, தேவனுக்கும்
மனுஷருக்கும் மத்தியஸ்தரும்
ஒருவரே.
எல்லாரையும் மீட்கும்பொருளாகத்
தம்மை ஒப்புக்கொடுத்த
மனுஷனாகிய கிறிஸ்து இயேசு
அவரே”
(1 தீமோத்தேயு 2:5,6)

ஆம், இயேசு சொன்னார் “எனக்கு சித்தமுண்டு சுத்தமாகு”. சிந்திப்போம் செயலாற்றுவோம்.



- Bro. M. Gnanendran -

# பவுல் கண்ட தரிசனங்கள் 7

1. **இரட்சிப்பின் தரிசனம்**
அப்போஸ்தலர் 9:1-8

2. **கீழ்ப்படிதலின் தரிசனம்**
அப்போஸ்தலர் 22:17-18

3. **மிஷனரி (அருட்பணி) தரிசனம்**
அப்போஸ்தலர் 18:9,10

4. **தைரியமூட்டலின் தரிசனம்**
அப்போஸ்தலர் 23:11

5. **இடரிலும் ஊழியத்தின் தரிசனம்**
அப்போஸ்தலர் 27:23,24


6. **பரலோக தரிசனம்**
2 கொரிந்தியர் 12:2

7. **இயேசு கிறிஸ்துவுடனான ஐக்கியத்தின் (அப்பம் பிட்குதலின்) தரிசனம்**
1 கொரிந்தியர் 11:23

**“தீர்க்கதரிசனமில்லாத
இடத்தில் ஜனங்கள்
சீர்கெட்டுப்போவார்கள்.
வேதத்தைக் காக்கிறவனோ
பாக்கியவான்.”
நீதிமொழிகள் 29:18**

# உறுதி

தேவனுடைய வார்த்தையில் எமக்குள்ள மாறாத நிச்சயங்கள்




### 1) நித்திய கால ஜீவனுக்கான உறுதி

"உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவகுமாரனின் நாமத்தின்மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவகுமாரனுடைய நாமத்தின் மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்"

(1 யோவான் 5:13)

### 2) விடுதலையின் உறுதி

"மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்". (1 கொரிந்தியர் 10:13)

### 3) பாவ மன்னிப்பின் உறுதி

"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" (1 யோவான் 1:9).

### 4) வளர்ச்சியடைதலின் உறுதி

"நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்." (1 பேதுரு 2:3). "நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்" (2 பேதுரு 3:18)

### 5) ஜெபத்திற்கான பதிலின் உறுதி

"நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்" (1 யோவான் 5:14,15)

- Sis. Beulah Paul -



# கர்த்தர் மேல் பாரத்தை வைத்துவிடு...

- Sis: E. Thadshageni (Vavunia)-


“கர்த்தர்மேல் பாரத்தை வைத்து விடு, அவர் உன்னை ஆதரிப்பார். நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார்.” (சங்கீதம் 55:22) என்ற வாக்கிற்கு அமைய விசுவாசிகளாகி எங்கள் வாழ்க்கையில் இடைப்படுகின்ற துன்பங்கள், கவலைகள், கண்ணீர்கள் ஆகிய யாவற்றையும் வைத்து ஆறுதலடைய எங்களுக்காக ஒரு நல்ல மேய்ப்பர் கொடுக்கப்பட்டுள்ளார் என்பதை மறந்து விடக்கூடாது. எனவே தான், இந்த வசனத்தின் முதல் பகுதி “கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்து விடு” என்று தெளிவாக குறிப்பிட்டுள்ளது. அப்படிப்பட்ட எங்களுடைய கவலைகளை தெரிவிக்கக்கூடிய வழிகளையும் தெளிவாக குறிப்பிட்டுள்ளது. (பிலிப்பியர் 4:6,7).

அவர் உன்னை ஆதரிப்பார் என்பதன் மூலம் கர்த்தர் நம்மை விசாரிக்கின்றார், அத்துடன் நம்மை வழிநடத்துகின்றார் (1 பேதுரு 5:7) என்பது புலப்படுகிறது. கர்த்தருடைய சீஷரில் ஒருவனான சீமோன் பேதுருவினுடைய கீழ்படிந்த விசுவாசத்தின் மூலமாக அது நமக்கு பிரதிபலித்துக் காட்டப்பட்டிருக்கிறது. அதாவது, கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து வலையைப்போட்டு திரளான மீன்களை பிடித்த விசுவாசமான வழிநடத்துதலைக் காண்கின்றோம் (லூக்கா 5:1-11). அவ்வாறே, இயேசு தமது சீஷர்களை நோக்கி, “வாருங்கள், போஜனம் பண்ணுங்கள்” என்பது அவர் நம்மை விசாரிக்கிறவராக இருக்கிறார் என்பதைக்காட்டுகிறது (யோவான் 21:9-12)

எனவே, கர்த்தர்மேல் கொண்ட விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்ட நாங்கள் (ரோமர் 5:1) ஒவ்வொருவரும் எமது விசுவாசப் பயணத்தில் நேரிடுகிற சோதனைகள், தளர்வுகள், போராட்டங்கள் மற்றும் கசப்பான அனுபவங்களின் போது விசுவாசப் பாதையை விட்டு விலகி நிற்கின்ற நம்மைப் பார்த்து கர்த்தர் கூறுகிறார்: “வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்” (மத்தேயு 11:28). ஆம், நிச்சயமாகவே எங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதலருளி வழிநடத்திய, வழிநடத்துகிற, வழிநடத்தப்போகின்ற ஒரே மீட்பர் எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே.

எனவே தான், சங்கீதக்காரன் இவ்விதமாக பாடுகிறான். “கர்த்தர் விழுகிற யாவரையும் தாங்கி மடங்கடிக்கப்பட்ட யாவரையும் தூக்கி விடுகிறார்” (சங்கீதம் 145:14).

எனக்கு அன்பானவர்களே, எந்தெந்த இடங்களிளெல்லாம் விழுந்தோமோ அல்லது விழுத்தப்பட்டோமோ அல்லது மடங்கடிக்கப்பட்டோமோ அந்தந்த இடங்களிலெல்லாம் நம்மை தாங்கி, தள்ளாட விடாதபடி ஸ்திரப்படுத்த உயர்த்த கர்த்தர் வல்லவர். அவர் ஒருவருக்கே சதா காலங்களிலும் கனமும், மகிமையும், வல்லமையும் உண்டாவதாக. ஆமென்.



# அநுகூலமான துணை

வாழ்க்கைக்கதை ஓர் சாட்சியாக

- Sis: Sumayanthani -

எனது பெயர் சுமயந்தனி. நான் வறுமையிலும் கஷ்டத்திலும் ஏழ்மை-யிலும் பிறந்தவள். எனக்கு ஒரு தங்கை மாத்திரம் உண்டு. என் தங்கை பிறந்து 62 நாட்களில் தந்தை இறந்து விட்டார். அப்போது எனக்கு இரண்டு வயது.

என் அம்மாவின் ஒன்றுவிட்ட அண்ணா தவிர வேறெந்த உறவு-களினதும் உதவியில்லாமல் இருந்த எங்களுக்கு உதவியாக அவரே தனக்கென ஒரு குடும்பத்தை அமைத்துக்கொள்ளாமல் துணையாயிருந்து வளர்த்து படிக்க வைத்து ஆளாக்கியவர் இன்றும் எங்களுடனே இருக்கிறார்.

நான் படிக்கும் நாட்களில் படிப்பி-லும் போட்டிகளிலும் சிறந்து விளங்கிய போதிலும் உற்சாகப்படுத்தவோ பாராட்டவோ ஒருவரும் இருந்ததில்லை. சாதாரண தரத்தில் சிறந்த பெறுபேறு-களைப் பெற்ற எனக்கு உயர்தரத்தில் 6 மாதகாலத்தின் பின் படிப்பை இடை நிறுத்த வேண்டிதாயிற்று. அடிப்படை கணினி பாடத்திட்டத்தில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற பின் சிறிய பாடசாலை-யில் தொண்டர் ஆசிரியையாக சிறிது காலம் தொழில் செய்துகொண்டிருக்கும் போது, இந்தியாவிலிருந்த என் தாய் வழி உறவுகளின் வற்புறுத்தலால் என் அம்மாவின் E.P.F. பணத்தை செலவழித்து, வீடு வாசல் பொருட்கள் வருமானம் யாவையும் விட்டு இந்தியா செல்ல நேர்ந்தது. ஆனால் அங்கு சென்றதும், அன்புக்கு மாறாக தகப்பன் இல்லாத பிள்ளைகள் என புறக்கணிக்கப்பட்-டோம். எங்கள் பணத்தையெல்லாம் அவர்கள் செலவழித்தார்கள். பிறகு, அவர்களை விட்டு விலகி நானும் என் தங்கையும் ஆடைத்தொழிற்சாலை ஒன்றில் வேலைக்கு சேர்ந்தோம். அதில் கிடைத்த சிறிய வருமானத்தில் பயத்தோடும் கவலையோடும் அன்பு காட்ட, ஆதரிக்க ஒருவருமில்லாமல் வாழ்வைத் தொடர்ந்தோம்.

இக்காலகட்டத்தில், இலங்கையில் இருந்த எங்கள் மாமா விபத்துக்கு உள்ளாகி கால் உடைந்தவரானார் என தொலைபேசி அழைப்பு வரவே, எங்கள் கவலைகளும் துக்கங்களும் இன்னும் அதிகமாக, மாமாவுக்கு உதவியாக மீண்டும் இலங்கை வர விரும்பின போதிலும் வசதியில்லாமல் தடுமாற, தங்கை வேலை செய்த வீட்டு எஜமானின் உதவியினால் இலங்கை வந்தோம். இங்கு வந்த பிறகு எங்களு-க்கு தங்க இடமோ, வருமானமோ, எந்த பதிவுகளோ இல்லாமல் மீண்டும் அநாதைகளானோம்.

தங்கை முன்னர் வேலை செய்த வீட்டிலேயே தங்கி வேலை செய்ய அம்மாவையும் மாமாவையும் வாடகை வீட்டில் தங்க வைத்து நான் வெளிநாடு சென்றேன். அங்கு ஒன்றரை வருடங்கள் மட்டுமே தொழில் செய்ய முடிந்தது. உடல்நிலை மோசமானதால் நாடு திரும்ப வேண்டியதாயிற்று. அங்கு சம்பாதித்த பணம் என் பயணச்சீட்டுக்கும் கரடு முரடான ஒரு நிலத்தை வாங்கவுமே சரியாயிருந்தது.

நாடு திரும்பிய பின், பத்து மாதம் மிளகாய் அரைக்கும் ஆலையிலும் பின்பு ஆடை தொழிற்சாலையிலும் இயந்திரங்களோடு இயந்திரங்களாக நானும் என் தங்கையும் விடுமுறையில்லாமல், பசி, தூக்கம் பாராமல் உழைத்து, வீடு கட்டி, வாங்கிய கடன் திருப்பி செலுத்தி முடிக்கும் போது வயது 29 முடிந்தது.

சனிக்கிழமை இரவு கொழும்பில் இருந்து ஊருக்கு செல்ல இருந்த ஒரே பஸ்ஸின் கண்டெக்டர் தமிழர் என்பதால் அவரின் தொலைபேசி இலக்கத்தை வாங்கிக்கொண்டேன். ஒவ்வொரு மாதமும் ஊருக்கு செல்லும் போது ஓர் ஆசனத்தை அவர் மூலமாக பதிவு செய்து கொள்வேன். இப்படி பழக்கமான அவர், அவராகவே தொலைபேசியில் அழைத்து அவர் மணம் முடித்து 15 வருடங்கள் எனவும் 3 பிள்ளைகள் இருக்கிறார்கள் எனவும் மனைவியுடனான பிரச்சினையினால் இருவரும் பிரிந்து விட்டதாகவும் தானே பிள்ளைகளைப் பார்த்துக்கொள்வதாகவும் பரிதாபமாக பேச ஆரம்பித்த அவர், ஒரு நாள் என்னை மணமுடிக்க கேட்டார். என் குடும்பத்தாருக்கு என்னை மணமுடித்துக்கொடுக்க வசதியில்லை எனவே நானே சுயமாக முடிவெடுத்து வீட்டாருக்கு விடயங்களைத் தெரிவித்து அவர்களின் சம்மதம் இல்லாமலேயே திருமணம் செய்து கொண்டோம். 5 நாள் விடுமுறையின் பின் வாடகைக்கு ஒரு வீட்டில் தங்கினோம். அப்போது அடிக்கடி அவருக்கு தொலைபேசி அழைப்பு வர, கட்டாயம் பண்ணி பிடிவாதமாய் நான் கேட்டபோது, என்னை மன்னித்து விடு, நான் பொய் சொன்னேன், என் மனைவியும் நானும் பிரியவில்லை ஒன்றாகத் தான் இருக்கிறோம், அவளைப் பழிவாங்கவே உன்னை மணமுடித்தேன் என்று சொன்ன போது நான் அனுபவித்த வேதனைகளை வார்த்தைகளால் சொல்ல முடியாது. 5 நாட்களிலே வாழ்ந்து முடித்துவிட்டேன். பிறகு நான் யோசித்து விட்டு அவரிடம் சொன்னேன், நீங்கள் சென்று உங்கள் குடும்பத்தைப் பாருங்கள், அவர்களிடமிருந்து உங்களை பிரித்த பாவம் எனக்கு வேண்டாம், எப்போது தோன்றுகிறதோ அப்போது வந்த பாருங்கள் என்று கூறி அவரை அனுப்பிவிட்டு நான் தொடர்ந்து வேலைக்கு சென்று என் கடமைகளை செய்தேன்.

இப்படியாக இரண்டு மாத காலம் சென்றது. அவர் வாரம் ஒரு தடவை வந்து சென்றார். மூன்றாம் மாதம் தொடங்குகையில் நான் கருவுற்றேன். அதன்பின் வேதனை, கஷ்டங்கள், சங்கடங்களுடன் தனிமையும் தவிப்புமாய் வாழ்ந்து பிள்ளையை பெற்றெடுத்த பின்பும் கூட அவர் அக்கறை, அன்பு காட்டுவதாக தெரியவில்லை.

பிள்ளை வளர்ந்தது. சிறுவர் பாடசாலையில் சேர்த்து நானே கூட்டிச்சென்று கூட்டி வந்தேன்.

ஒரு நாள் எதிர்பாராத விதமாக என்னோடு படித்த ஒரு பெண்ணை சந்தித்தேன். அவளும் அவள் மகளை சிறுவர் பாடசாலையில் சேர்த்திருந்-

தாள். சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்ததில் என் வாழ்க்கையையும் என் கஷ்டங்களையும் சொன்னேன். அதை கேட்டு மிகவும் கவலைப்பட்ட அவள், நான் வீடு திரும்பியதும் அன்று மதியமே தன் கணவருடன் என்னை தேடி வீட்டிற்கு வந்தாள். அவர்கள் இருவரும் கர்த்தரின் ஊழியக்காரர்கள். அவர்கள் என் கதையையும் கணவனின் சித்திரவதை தாங்காமல் பிரிந்து வந்து என்னுடன் தங்கியிருந்த என் தங்கையின் கதையையும் கேட்டு ஜெபம் செய்தார்கள். எங்கள் பாரங்களை கர்த்தரின் பாதங்களில் இறக்கி வைத்தோம். கண்ணீர் மட்டுமே பெருகியது. எங்கள் கவலைகளும் வேதனைகளும் கண்ணீராய் கரைந்தன.

அன்று முதல் எல்லாம் வல்ல, கனம் பொருந்திய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிள்ளைகளானோம். சபை ஊழியக்காரர் மூலம் கர்த்தர் எங்களை அரவணைத்துக்கொண்டார். எங்கள் கவலைகளையும், துயரங்களையும் அக்கறையோடு கேட்கவும் எங்கள் கண்ணீரை துடைக்கவும் அரவணைக்கவும் ஆறுதல் சொல்லி நல்ல ஆலோசனை வழங்கவும் கர்த்தர் எமக்கு நிறைய சொந்தங்களை கொடுத்தார். ஒரு பிரச்சினை என்றால் நீதி வழி சொல்லவும் சுகயீனம் என்றால் ஆறுதலாய் தாங்கி அரவணைக்கவும் சொந்தங்கள் உள்ளன. எங்களை ஆசீர்வதித்து எங்கள் தேவைகளை சந்திக்கின்றார். என் தங்கையின் கணவர் என் தங்கையையும் குழந்தையையும் அழைத்துச்சென்று விட்டார்.

இவற்றில் நான் சொன்னவை பாதி விட்டவை பாதி. வாசிக்கும் போது சாதாரணமாக தோன்றினாலும் இந்த எல்லா பிரச்சினைகளையும் கஷ்டங்களையும் அனுபவித்த போது அதின் வலியை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. விபரம் தெரிந்த நாள் முதல் கஷ்டம், வறுமை, கவலை, வேதனை, துக்கம், துயரம் என்றே வாழ்ந்து பழக்கப்பட்ட எங்களுக்கு இப்போது ஆறுதல், நிம்மதி எல்லாம் கிடைத்துள்ளது. கர்த்தரின் அரவணைப்புக்குள் கவலைகள் மறந்து களிகூருகிறோம்.

அன்பான கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையை வல்லமையை உணர்ந்து ஆனந்த கண்ணீர் வடிக்கிறேன். என் தேவைகளை சந்தித்து வருகிற தேவனுக்கே மகிமை உண்டாவதாக. என் வாழ்வை, என் குணங்களை மாற்றி பரிசுத்தமாக்கி நீதியானதும் நேர்மையானதுமான பாதையில் என்னை வழிநடத்தும் தேவனுக்கு ஸ்தோத்திரங்கள் கோடி. என் குடும்பம் குழந்தைகளை ஆசீர்வதித்து ஆறுதலை தந்த தேவனுக்கு நன்றிகள். எனக்காகவும் குழந்தைகளுக்காகவும் ஜெபிக்கும் சொந்தங்களை கொடுத்தமைக்காக கர்த்தருக்கு நன்றிகள் கோடி. ஆயுள் முழுதும் ஆராதிப்போம் எல்லாம் வல்ல தேவனை.

**தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர். சங்கீதம் 46:10**

# உங்களுக்கு தெரியுமா

1) நோவாவின் பேழை எந்த மலையின் தங்கிற்று?

2) கர்த்தர் மோசேக்கு கற்பனைகளைக் கொடுத்த மலை எது?

3) மோசே எந்த மலையில் இறந்தான்?

4) மோசேயினால் ஆசீர்வாதம் எந்த மலையின் மேல் கூறப்பட்டது?

5) எருசலேமுக்கு ஒரு ஓய்வு நாள் பிரயாண தூரத்தில் இருக்கிற மலை எது ?

1) அரராத் (ஆதியாகமம் 8:4)
2) சீனாய் (யாத்திராகமம் 24:16)
3) நேபோ (உபாகமம் 34:1)
4) கெரிசீம் மலை (உபாகமம் 11:29)
5) ஒலிவமலை (அப்போஸ்தலர் 1:12)

## ஜீவ ஒளி

**ஜீவ ஒளி சஞ்சிகையை தொடர்ந்தும் நான் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன்.**

**பெயர்:** ................................................................................................

**முகவரி:** ................................................................................................

................................................................................................

................................................................................................

**ஒப்பம்:** ................................................................................................

# ஜீவ ஒளி

கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனத்தினால் இலவசமாக வெளியிடப்படும் ஜீவ ஒளி சஞ்சிகையை தொடர்ந்து நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பினால் உள்ளே இருக்கும் கூப்பனில் உங்கள் பெயரையும் முகவரியையும் நிரப்பி அனுப்பிவையுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு:


Jeeva Oli
Christian Fellowship Centre
7, Vivekananda Road, Wellawatte,
Colombo 6.
Tel: 2581901
www.christianfellowshipcentre.com